PR.NO.341 **செய்தி வெளியீடு – 10.6.2007**

# தமிழகத்திலுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அனைவருக்கும் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

**தமிழக அரசு அனைத்துத் துறைகளிலும் படிப்படியாக மின் ஆளுமை திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. இதற்கு அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் கணினிகளைப் பரவலாகப் பயன்படுத்துவது அவசியமாகும். அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்ற உயர் அதிகாரிகள் அலுவலக நேரங்களுக்குப் பின்னரும்கூட முக்கிய தகவல்களைக் கையாளவேண்டியுள்ளது. இதற்கு உதவும் வகையில் தமிழகத்தில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அனைவருக்கும் மடிக்கணினிகள் (Laptop Computers) வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 295 அதிகாரிகளுக்கு மடிக்கணினிகள் உரிய துணைக் கருவிகளுடன் 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது. முதலமைச்சர் கலைஞர் இன்று (10.6.2007) தலைமைச் செயலகத்தில் தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, நிதித் துறை செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், பொதுப்பணித் துறை செயலாளர் திரு.ஆதிசேஷையா, தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளர் திரு.சந்திரமௌலி, எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.உமாசங்கர், மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.முருகானந்தம், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி மற்றும் சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு மடிக் கணினிகளை வழங்கி இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.**

**அரசு வழங்கும் இந்த மடிக்கணினிகளை அதிகாரிகள், அவர்கள் எந்தப் பதவிக்கு மாற்றப்பட்டாலும் தங்களுடன் எடுத்துச் செல்லலாம். இதனால் ஒவ்வொரு முறையும் பதவி மாறுதல் அடையும்போது கணிணிக் கோப்புகளை நகலெடுக்கவோ, நீக்கவோ வேண்டிய நிலை தவிர்க்கப்படும்.**

ISSUED BY DIPR, CHENNAI * * *